செ.வெ.எண் : நாள் : 11.09.16

**விண்ணப்பங்களை முழுமையாக, சரியாக பூர்த்தி செய்து வழங்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் பொது மக்களுக்கு வேண்டுகோள்**

--

விருதுநகரில் வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, கே.வி.எஸ்.ஆண்கள் மேல்நிலைலைபள்ளி, ஷத்திரிய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சுப்பைய நாடார் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடைபெற்று வரும் வக்காளர்பட்டியலில் சிறப்பு சுருக்க திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு இன்று (11.09.16) ஆய்வு செய்தார்

இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில், விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1872 வாக்குச்சாவடிகளில் அமைந்துள்ள 942 இடங்களில் இன்று (11.09.16) வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்க திருத்த முகாம் நடைபெற்று வருகிறது. இது போன்று மற்றொரு முகாம் 25.09.16 அன்றும் நடைபெறவுள்ளது. இம்முகாம்களில் கடந்த 01.09.16 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க / நீக்க, திருத்தம் மேற்கொள்ள விரும்பும் நபர்கள் விண்ணப்பங்களை அளித்து பயன்பெறலாம்.

மேலும், இது தவிர 30.09.16 வரை அனைத்து வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் மனுக்களை வழங்கலாம். இன்று (11.09.16) விருதுநகரில் வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, கே.வி.எஸ்.ஆண்கள் மேல்நிலைலைபள்ளி, ஷத்திரிய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சுப்பைய நாடார் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடைபெற்று வரும் வக்காளர்பட்டியலில் சிறப்பு சுருக்க திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் விண்ணப்பங்களை முழுமையாகவும், சரியாகவும் பூர்த்தி செய்து வழங்குகிறார்களா எனவும், முறையான வசிப்பிட ஆவணங்கள் இணைக்கப்படுகிறதா எனவும் ஆய்வு செய்தார். விண்ணப்பங்களில் தொலைபேசி எண்கள் கண்டிப்பாக பூர்த்தி செய்ய வேண்டும் எனவும், ஒப்புகை சீட்டு தவறாமல் வழங்க வேண்டும் எனவும், 25 வயதுக்கு மேல் உள்ளவர்கள் அவர்கள் ஏற்கனவே குடியிருந்த முகவரியை கண்டிப்பாக படிவத்தில் பூர்த்தி செய்து படிவங்களைப் பெற வேண்டும் எனவும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிகளை ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு துணை ஆட்சியர் நிலையிலான மண்டல அலுவலர் மூலம் கண்காணிக்கபட்டு வருகிறது. எனவே, இந்த வாய்ப்பினைப்பயன்படுத்தி தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்து கொள்ளும் படியும், 01.01.2017 அன்று 18 வயது பூர்த்தியடையும் இளைஞர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின் போது வட்டாட்சியர் திரு. சங்கரபாண்டியன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**